# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.944/2015
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.10
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வராணி | -- | |
| Husband Name | டேவிட் ஞானராஜ் | Calling | ஆசிரியர் |
| Village | மடவார்வளாகம் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of May 2025.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் மடவார்வளாகம், காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் அரசுப்பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். 2011 ம் ஆண்டில் ராமலெட்சுமி என்பவர் ராஜபாளையம் உரக்கடை காம்பளக்ஸில் உள்ள எஸ் எம் எப் நிதி நிறுவனத்தில் களப்பணியாளராக உள்ளதாக கூறி 10 நபர்கள் ஒரு குழுவாக சேர்ந்து ஆளுக்கு தலா ரூ.1000/– வீதம் கட்டினால் தனிநபர் கடனாக ரூ.25,000/– ஒரு நபருக்கு தருவதாக என்னிடம் தெரிவித்தார். அதன் பெயரில் 2011 ம் ஆண்டிலேயே நான் 10 நபர்களிடம் தலா ரூ.1000/– வீதம் பெற்ற ரூ.10,000/– யை ராமலெட்சுமி வசம் ஒப்படைத்தேன். அதன் பிறகு நான் சேர்த்திருந்த உறுப்பினர்கள மேற்படி நிறுவனத்தை பார்க்கவேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் மேற்படி நிதி நிறுவனத்திற்கு சென்றோம். நாங்கள் சென்று பார்த்தபோது மேற்படி நிறுவனத்தில் 4 நபர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனத்தின் மேலாளர், துணை மேலாளர் போன்ற விபரங்கள் எனக்கு தெரியாது. அதன் பின்னர் ராமலெட்சுமியிடம் லோன் சம்பந்தமாக விசாரித்தபோது மேற்படி நிறுவனத்தினர் ஏமாற்றி சென்றதாக என்னிடம் தெரிவித்தார். தற்போது வரை நாங்கள் கட்டிய பணமும் வேறு எந்தவித லோன் தொகையும் எங்களுக்கு வரவில்லை. ராமலெட்சிமியிடம் நாங்கள் கேட்டபோது இது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாக என்னிடம் தெரிவித்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையில் ராஜபாளையம் தென்காசி ரோடு உர காம்பளக்ஸில் எஸ் எம் எஸ் என்ற கிளை நிர்வாகம் செயல்படுவதாகவும் அதில் ராமலெட்சுமி களப்பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் அந்த நிறுவனத்தில் 10 நபர்களை ஒரு குழுவாக நியமித்து நபருக்கு ரூ.1000/- வீதம் ரூ.10,000/- செலுத்தினால் உடனடியாக தனிநபர் கடனாக ரூ.25,000/- பெற்று தருவதாகவும் கூறியதன் பெயரில் நான் 10 நபர்களை ஜாஸ்மின் மகளிர் குழு என்ற பெயரில் குழுவாக நியமித்து நபருக்கு ரூ.1000/- வீதம் ரூ.10,000/- அவரிடம் கொடுத்து ராஜபாளையத்திலுள்ள கிளை நிறுவனத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன் என்றும் அந்த ரசீதில் மேலாளர் குருவாண்டவர் என்பவர் கையெழுத்திட்டு கொடுத்தார் என்றும் அந்த நிறுவனத்தின் துணை மேலாளர் பொன்மணி என்றும் அதில் பாலமுருகன், வீரமுத்து ஆகியோர்கள் பணிபுரிந்து வருவதாகவும் மேற்படி கிளை நிறுவனத்தில் தலைமை அலுவலகம் தஞ்சாவூரில் செயல்படுவதாகவும் மாதவன் என்பவர் மேற்படி நிறுவனத்தில் நிர்வாக இயக்குநராக இருந்துள்ளார் என்றும் வாசுகி என்பவர் இரண்டாவது பங்குதாரராக இருந்து நடத்தி வந்தார் என்றும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of May 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**